சார்பு நீதிமன்றம். விருதுநகர்

H.M.O.P.No: 29/2026 Date: 24.04.2026

மனுதாரர் தரப்பு சாட்சி–1(P.W.1)ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.N.வீரராஜ், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமாதேவி | சாதி | : | -- |
| த/பெ | : | சேதுராஜ் | சமயம் | : | -- |
| கிராமம் | : | புதுப்பட்டி | தொழில் | : | |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 26 |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். மனு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். திருமண அழைப்பிதழ் **ம.சா.ஆ.1**. திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் **ம.சா.ஆ.2.** 18.04.2025ம் தேதிய புகார் மனு ஏற்பு ரசீது **ம.சா.ஆ.3.** 09.05.2025ம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.4**. அஞ்சலக ரசீது **ம.சா.ஆ.5**. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.6.** எனது ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.7**.(அசலுடன் ஒப்பிடப்பட்டது). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)